ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

20.03.2025

1. தானபலம் ஞானபலம் உலகோர்
தரணியோர் அடைந்து உயரவே
ஞானசபையாம் பிரணவக் குடிலை
ஞானிகளை கூட்டி அரங்கன் யானும்

2. அரங்கன் யானும் அமைத்து அருளிவர
அணுகுவோர் எல்லாம் தேறுவரென
வரங்கள் தந்து குருவார அருளாசி
வழங்குவேன் குரோதி சேல் திங்களில்

3. திங்களில் முதல் குருவார அருளாசி
தேசிகனார் யானும் வழங்குவேன்
ஓங்கார மெய்ஞானம் அடைய வேண்டுமா
ஓங்காரக் குடிலை அடைந்தால் போதும்

4. போதுமப்பா வேலவனார் ஆசி காட்சி
புண்ணியத்தை கொண்டு அடைய நேரும்
ஆதரவாய் அரங்கனென் குடிலமுதாம்
அருளமுதை உண்டால் போதுமப்பா

5. அப்பனே தானென்ற கர்வங்கள்
அகன்றொழிந்து உலக உயிர்களில்
சுப்பனே நிரம்பி உள்ளார் எனும்
சூட்சுமமும் விளங்கி ஜீவதயவு பிறக்கும்

6. பிறக்குமே உயிர்க்கொலை நீக்கியே
பிறப்பறுக்கும் சிவநெறி சைவநெறி தழுவியே
அறத்தின் வழி சொல் செயலுமாகி
அரங்கனென் சன்மார்க்கம் சரியேயென

7. சரியே என சரணாகதி கண்டிடும்
சக்தியும் மனஉறுதியும் கூட்டி
அரங்கன் என்னுள் ஆறுமுகனார் இருக்கும்
அவதார மகிமையும் விளங்கி இனிதே

8. இனிதே என் காட்சி வேலவன் காட்சி
ஏழாம் படை வீட்டில் கண்டடைய நேரும்
கனிவேலவன் கருணை தந்து நடத்தும்
கலியுக தருமசாலைதான் ஓங்காரக்குடில் எனும்

9. எனும் உண்மையும் நம்பகமும் விளங்கி
இனிதே அன்னதானப் பணியில் தொண்டுடன்
தானதருமமாகப் பொருளுதவி செய்து
தடையின்றி தொடர்ந்து வர நேரும்

10. வரவர ஞானிகள் பலமிக்க
வரமும் ஆசியும் தனிபலமாகியே
சரவண சோதியுள் பல ரகசியம்
சகஷமாய் அனுதினமும் கண்டுணர்ந்து

11. உணர்ந்து ஞானிகள் ஆவரப்பா
உண்மை நெறி உண்மை குருவழி
உணர்ந்து கலந்து பிறவாப் பேறு
உலகோர் யாவரும் அடைவரப்பா
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி